டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 13.10.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 096 | Madurai | Online Edition

# மதுரையில் அலங்கார மீன்வளர்ப்புப் பண்ணைகளை மத்திய மீன்வளத்துறைச் செயலாளர் நேரில் ஆய்வு



புது தில்லி, அக்.12

மத்திய மீன்வளத்துறைச் செயலாளர் அபிலாக்ஷ் லிக்கி மதுரையில் அலங்கார மீன் வளர்ப்புப் பண்ணைகளை நேரில் ஆய்வு செய்தார்.

மதுரை மாவட்டம், மேலூர் அருகே முக்கம்பட்டியில் இயங்கி வரும் பாண்டிமுனீஸ்வரர் ஒருங் கிணைந்த அலங்கார மீன் வளர்ப்புப் பணியை அதிகாரிகளுடன் ஆய்வு செய்தார். அப்போது, மீன் வளர்ப்பு விவசாயிகளிடம் உரையாடிய அவர், அலங்கார மீன் வகைகள், மீன்குஞ்சுகள் மற்றும் அவற்றுக்கான உணவுகள், நீர் தரம் மற்றும் சந்தைப் படுத்துதல் ஆகியவை குறித்துக் கேட்டறிந்தார். உள்நாட்டு மீன் வகைகள், மீன் குஞ்சு பொறித்தலில் அறிவியல் நடைமுறைகள், தொழில்நுட்ப ஊக்குவிப்பு ஆகியவற்றைப் பாராட்டினார்.

நாடு முழுவதும் 34 அலங்கார மீன்வளர்ப்புத் தொகுப்புகள் உருவாக்கப்பட்டு வருவதாகவும், உற்பத்தி, மீன்குஞ்சுகள் விநியோகம், உள்கட்டமைப்புகள், திறன் மேம்பாடு, சந்தைப் படுத்துதல் ஆகியவற்றுக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதாகத் தெரிவித்தார். பிரதமரின் மீன்வள மேம் பாட்டுத் திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் அலங்கார மீன்வளர்ப்புத் திட்டத்தில் மதுரையில் இணைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டு வருவதாக அபிலாக்ஷ் லிக்கி கூறினார்.

பாண்டி முனீஸ்வரர், ஒருங்கிணைந்த அலங்கார மீன் பண்ணை, பிரதமரின் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 25 லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கப்பட்டுள்ளது. ஆண்டுக்கு 2 லட்சம் மீன்களை உற்பத்தி செய்து 3.75 லட்சம் வருமானம் ஈட்டி வருவது குறிப்பிடத்தக்கது.

# தொழிற்கல்வி மாணவர்களுக்கான தேனீ வளர்ப்பு திறன் பயிற்சி



மதுரை, அக்.12

மதுரை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தமிழக அரசின் தொழிற் கல்வி பாடப்பிரிவு 26-27 ஆம் கல்வி ஆண்டில், தொழில் துறை மற்றும் மாநில திறன் மையங்கள் மூலம் தொழிற்கல்வி பாடத்தில் பயிலும் மாணவர்களுக்கான திறன் பயிற்சி (Skill Training) திட்டத்தின் கீழ் தேனீ வளர்ப்பு என்ற தலைப்பில் 20 நாட்கள் பயிற்சியின் முதற் கட்டமாக (Phase -I) 27.01.26 முதல் 29.01.26 வரை மூன்று நாட்கள் அறிமுக பயிற்சி நடைபெற்றது.

இரண்டவது கட்ட (Phase -II) பயிற்சியானது, 12.10.26 முதல் 05.11.26 வரை நடைபெற உள்ளது. இந்த பயிற்சியின் துவக்க விழா 12.10.26 அன்று வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சிக்கு முனைவர் கா.சுப்பிரமணியன் முதன்மையர், மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தலைமை தாங்கி சிறப்பித்தார். அவர் தனது தலைமை உரையில் தொழில் கல்வியானது பட்டறிவைப் பெறுவதற்கும், தனித்திறன்களை வளர்த்துக் கொண்டு தொழில் முனைவோராக மாறுவதற்கும், வாய்ப்புகளை உருவாக்கித் தர வல்லது. எனவே மாணவர்கள் இந்த நல் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் சு.தயாளன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், மதுரை, கலந்து கொண்டார். அவர் தனது சிறப்புரையில் தேனீக்களைப் போல் மாணவர்கள் சுறுசுறுப்பு டனும் செயல்படவும், உழைப் பதற்கு கற்றுக் கொள்ள வேண்டும் எனவும், வேளாண் விஞ்ஞானிகள் வழங்கும் தொழில்நுட்பங்களை மாணவர்கள் நன்கு கற்றுக் கொண்டு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தார். மேலும் ம கணேசன், மாவட்ட கல்வி அலுவலர் (இடைநிலை), மேலூர், மா.மாரி, மாவட்ட உதவி திட்ட அலுவலர், மதுரை, சிறப்புரை ஆற்றினர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

முன்னதாக முனைவர் கி.சுரேஷ், முதன்மை விஞ்ஞானி மற்றும் தலைவர், வேளாண்மை அறிவியல் நிலையம், மதுரை, வரவேற்புரை ஆற்றினார். நிகழ்ச்சியின் இறுதியில் முனைவர் கு.ஆனந்த், தொழில்நுட்ப வல்லுநர் (பயிரினப் பெருக்கம் மற்றும் மரபியல்) நன்றியுரை கூறினார். இந்த பயிற்சியில் மதுரை மாவட்டத்தில் உள்ள அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, அலங்காநல்லூர் அரசு மேல்நிலைப்பள்ளி, திருவாதவூர் மற்றும் னி.சத்திரப்பட்டி ஆகிய பள்ளிகளில் இருந்து 82 மாணவ, மாணவிகள் கலந்து கொண்டு பயிற்சி பெறுகின்றனர். இந்நிகழ்ச்சியில், வேளாண்மை அறிவியல் நிலைய விஞ்ஞானி களான முனைவர்கள் இ.சுப்பிரமணியன், கு.செல்வராணி, பா.அருள் அரசு மற்றும் கி.ஜோதிலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டனர். பயிற்சியினை, தொழில் நுட்ப உதவியாளர்கள், விஜயலலிதா, ரம்யா மற்றும் பண்ணை மேலாளர் காயத்ரி தேவி ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

# கிராம நிர்வாக அலுவலரை (VAO) நேரில் சந்தித்த இறுதியாண்டு வேளாண் மாணவர்கள்




நாகப்பட்டினம், அக்.12

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் இயங்கி வரும் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதியாண்டு மாணவர்கள் குடவாசல் வட்டாரத்தில் கிராமப் புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ், கிராம நிர்வாக அலுவலரை (VAO) நேரில் சந்திக்கப்பட்டு கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. இச்சந்திப்பின் போது, கிராமத்தின் மக்கள் தொகை, விவசாய நிலங்களின் பரப்பளவு, முக்கியமாக சாகுபடி செய்யப்படும் பயிர்கள், பாசன வசதிகள் மற்றும் விவசாயிகளின் வாழ்வாதார நிலை உள்ளிட்ட பல்வேறு தகவல்கள் பெறப்பட்டன.

மேலும், கிராமத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் அரசு நலத் திட்டங்கள், வேளாண்மை சார்ந்த திட்டங்கள், விவசாயிகளுக்கு வழங்கப்படும் சான்றிதழ்கள் மற்றும் அரசு சேவைகள் குறித்த விவரங்களும் கேட்டறியப்பட்டன. கிராமத்தின் வேளாண் நிலவரம், நிர்வாக நடைமுறைகள் மற்றும் விவசாயிகளால் எதிர்கொள்ளப் படும் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்த தகவல்கள் கிராம நிர்வாக அலுவலர் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டன.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# சீரான உரப் பயன்பாடு மற்றும் உரப் பயன்பாட்டுத் திறன் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி



மதுரை, அக்.12

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் வட்டாரம், வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை ATMA 2026-27 ஆம் ஆண்டு புதுக்குளம் பிட் 1 கிராமத்தில் சீரான உரப் பயன்பாடு மற்றும் உரப் பயன்பாட்டுத் திறன் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி திருப்பரங்குன்றம் வேளாண் உதவி இயக்குனர் மீனாட்சி சுந்தரம் தலைமையில் நடை பெற்றது. சீரான உரப் பயன்பாடு மற்றும் உரப் பயன்பாட்டுத் திறன் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி இயற்கை உரங்கள் மற்றும் உயிர் உரங்கள் ஆகியவற்றை ஒருங்கிணைத்து பயன்படுத்தும் ஒரு நிலையான வேளாண்மை நடைமுறையாகும் என்பதை விளக்கி கூறினார்கள். முனைவர் ஞானவேல் சாமுவேல் ராஜா, சமச்சீரான உரப் பயன்பாடு மற்றும் இயற்கை மண் வளத்தை அதிகரித்து பயிர் உற்பத்தியை மேம்படுத்த உதவுகிறது. தழைச்சத்து மணிச்சத்து சாம்பல்சத்து வேளாண்மையின் முக்கிய நோக்கம் நீண்டகால மண் ஆரோக்கியத்தை பாதுகாத்து சமநிலை தாவர ஊட்டச்சத்தை வழங்குவதுடன் சுற்றுச்சூழல் வளத்தை அதிகரிப்பதாகும். இது நவீன வேளாண்மை இயற்கை விவசாயம் மற்றும் நிலையான பயிர் உற்பத்தி முறைகளில் அதிக மகசூலும் வளங்களின் திறமையான பயன்பாட்டையும் அடைய பரவலாக பயன்படுத்தப்படுகிறது.

ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மையின் அடிப்படை கோட்பாடு பண்ணைச் சானம் வெர்மி கம்போஸ்ட் பச்சை உரம் பயிர் மீதமுள்ள கழிவுகள் உயிர் உரங்கள் மற்றும் ரசாயன உரங்கள் போன்ற பல்வேறு ஊட்டச்சத்து மூலங்களை சரியான முறையிலும் மற்றும் ஒருங்கிணைந்த பயன்படுத்துவதாகும் செயல் விளக்கத்துடன் கூறினார். மதுரை மாவட்ட ஈ ஷா ஒருங்கிணைப்பாளர் அருண்குமார், தற்காலச் சூழலில் இயற்கை விவசாயம் மிகவும் அவசியம் என்பதை உணவு முறைகளுடன் எப்படி ஒன்றி போக வேண்டும் என்பதையும் எடுத்து கூறினார். ஒருங்கிணைந்த அணுகுமுறை நைட்ரஜன் பாஸ்பரஸ் பொட்டாசியம் மற்றும் நுண்ணூட்ட சத்துக்கள் ஆகியவற்றை பயிர் களின் தேவைக்கேற்ப சரியான அளவிலும் சரியான நேரத்திலும்

வழங்குகிறது என்பன குறித்து பயிற்சி அளித்தார். வேளாண்மை அலுவலர் அருள் நவமணி விஜய பாரதி நடைமுறைகள் மண்ணின் கட்டமைப்பை மேம்படுத்துகின்றன மண் உயிர்சத்து கார்பனை அதிகரிக்கின்றன. நுண்ணுயிர் செயல்பாட்டை ஊக்குவிக்கின்றன மற்றும் ஊட்டச்சத்து சுழற்சியை மேம்படுத்துகின்றன இயற்கை உள்ளீடுகள் மண் ஆரோக்கியத்தையும் நீர்தாங்கும் திறனையும் உயர்த்துகின்றன. அதேநேரத்தில் ரசாயன உரங்கள் உடனடி ஊட்ட சத்து கிடைப்பை வழங்குகின்றன, உயிர் உரங்கள் ஊட்டச் சத்துக் களின் கரையக்கூடிய தன்மையையும் உயிரியல் நைட்ரஜன் நிலை நிறுத்தத்தையும் அதிகரிக்கின்றன என்றும் எடுத்துக் கூறினார்கள்.

துணை வேளாண்மை அலுவலர் அழகேசன், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை அதிக அளவில் ரசாயன உரங்களின் மீது சார்ந்து இருப்பதை குறைக்க உதவுகிறது, இதனால் உற்பத்திச் செலவுகள் குறைகின்றன மற்றும் மண் உப்பு சேர்த்தல் ஊட்டச்சத்து மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாடு போன்ற அபாயங்கள் தடுக்கப்படு கின்றன, இது பயிர்களின் கருத்தை மேம்படுத்தி அழுத்த நிலை களை தாங்கும் உயர்த்தி சுற்றுச்சூழல் சமநிலையை பேணும் வகையில் நிலையான வேளாண்மை ஆதரிக்கின்றது, நிலையான வேளாண்மை மண்ணை ஆரோக்கியத்தை மேலாண்மை மற்றும் இரசாயன மற்றும் பயிர் உற்பத்தி மீது அதிகரித்து வரும் கவனத்தின் காரணமாக ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து மேலாண்மை நவீன வேளாண்மை முறைகளின் முக்கியமான தந்திரமாக உருவெடுத்து உள்ளது. இதன் முழுமையான அணுகுமுறை நீண்டகால மண் வளம் மேம்பட்ட பயிர் உற்பத்தி மற்றும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மை உறுதி செய்கின்றது. இதனால் சமநிலை மற்றும் பொறுப்பான வேளாண்மை நடைமுறைகளின் அவசியமான ஊராக விளங்கு கின்றது. சமச்சீரான உரப்பயன் பாட்டை மேற்கொள்வதன் மூலம் நிலையான வேளாண்மையை ஊக்குவித்தல் மண் ஆரோக்கி யத்தை மேம்படுத்துதல் குறித்தும் செயல் விளக்கத்துடன் விவசாயி களுக்கு பயிற்சி அளித்தார்.

ஈஷா மண் காப்போம் இயக்கம், மதுரை மாவட்ட ஒருங் கிணைப்பாளர் அருண்குமார், காய்கறிகள், மல்லிகை மற்றும் நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் குறித்து இயற்கை வேளாண்மை குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார். புதுக்குளம் பிட் 1 கிராமம் மற்றும் அருகில் உள்ள கிராமங்களில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டு பயிற்சி பெற்றனர். இம் மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சிக்கு விவசாயிகள் மற்றும் செயல் விளக்கம் அமைப்பினை தொழில்நுட்ப மேலாளர்கள் அழகர் மற்றும் மகாலட்சுமி செய்திருந் தனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து வட்டார தொழில் நுட்ப மேலாளர் லதா முகவுரை மற்றும் நன்றியுரை வழங்கினார்.

# கோழி வளர்ப்பு பற்றிய உள் வளாக பயிற்சி



கடலூர், அக்.12

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தாசலத்தில், 12.10.26 அன்று கோழி வளர்ப்பு பற்றிய உள்வளாக பயிற்சி நடைப்பெற்றது.

இப்பயிற்சியை வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, கோழி வளர்ப்பின் முக்கியத்துவம் மற்றும் கோழி வளர்ப்பு மூலம் பொருளாதார நிலையை உயர்த்துவது குறித்தும் விளக்கினார். கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம், கடலூர் முனைவர் ந.வெங்கடபதி (பேராசிரியர் மற்றும் தலைவர்), கோழிபண்ணை துவங்கும் முன் கவனிக்க வேண்டியவை, கோழி வளர்ப்பின் நோக்கம், கோழிகளை தேர்வு செய்தல், கோழி வளர்ப்பின் முறைகள், கோழி பண்ணை கொட்டகை அமைக்கும் முறைகள், கோழிக்கு தேவையான ஊட்டச்சத்து மேலாண்மை, நாட்டு கோழி வளர்ப்பின் சிறப்புகள் மற்றும் பல்வேறு வகையான கோழியின் வகைகள் அதன் சிறப்பியல்புகள் பற்றியும், புறக்கடை வளர்ப்பின் தரம், முறைகள் மற்றும் ஆழ்கூள முறையில் கோழி வளர்ப்பு மற்றும் நோய் பராமரிக்கும் முறைகள் பற்றியும் தெளிவாக விவசாயி களுக்கு விளக்கினார்.

மேலும் இப்பயிற்சியில் முனைவர்கள் சத்தியநாரயணன், சு.ஜெய்வேலு, க.கலைச்செல்வி, கமலகண்ணன், சிவசங்கர் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

மேலும் இப்பயிற்சியில் கடலூர் மாவட்டத்தை சேர்ந்த 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்துக் கொண்டு பயன்பெற்றனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# நவீன வேளாண்மையில் காளானில் உள்ள சத்துக்கள் மற்றும் மருந்துப் பொருள்கள் – ஒரு பார்வை



## காளானின் மருத்துவ குணங்கள்

இந்தியாவில் பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப சத்தான உணவு அளிப்பது மிகவும் கடினமான இலக்காக உள்ளது. 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்று கூறிய நம் முன்னோர்கள் நோய் நொடியின்றி நீண்ட காலம் வாழ்ந்து வந்ததற்கு முக்கியக் காரணம் சத்தான, உடலுக்குத் தீங்கு விளைவிக்காத, இயற்கையில் கிடைக்கும் உணவுப் பொருட்களை உண்டு மகிழ்ந்ததேயாகும். மாறிவரும் மனிதனின் வாழ்க்கை முறையாலும், நகர மயமாக்கல் மற்றும் பருவமழை பொய்ப்பது போன்ற காரணங்களாலும் நல்ல சத்தான உணவுப் பொருட்களைச் சாகுபடி செய்ய உதவும் வேளாண் நிலப்பரப்பானது குறைந்து வருகிறது. இச்சூழ் நிலையின் காரணமாக நல்ல ஊட்டச்சத்து மிகுந்த உணவுப் பொருட்கள் கிடைப்பது இக்குறைபாட்டை நீக்க அரிதாகிறது. இயற்கையன்னையால் நமக்களிக்கப்பட்ட ஒரு சிறந்த உணவுப்பொருள் காளானே ஆகும்.

காளான் ஒரு நிறைவான, சத்தான உணவு. பொதுவாக காளான் எல்லா வயதினருக்கும் ஏற்ற உணவாகும். எல்லாக் காளான் களிலும் புரதச்சத்து அதிகமாக உள்ளது. மேலும் எளிதாக ஜீரண மாகக் கூடிய நார்ப் பொருட்களும் அதிக அளவில் உள்ளன. பொது வாக வெவ்வேறு காளான்களில் மாவுச்சத்து 26-82 சதம் வரை உலர் எடையில் இருப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் குறிப்பிடுகின்றன. கொழுப்புச்சத்து மிகக் குறைவாக உள்ளது. மேலும் நன்மை பயக்கும் கொழுப்புகளின் அளவு அதிகமாகவும், கெட்ட கொழுப்பு களின் அளவு மிகவும் குறைவாக இருப்பதாகவும் கண்டறியப் பட்டுள்ளது. 'எர்கேஸ்டிரால்' என்னும் வேதப்பொருள் அதிகம் இருப்பதால் வைட்டமின் 'ஈ' (E) உற்பத்தியாக ஏற்றதாக உள்ளது.

காளானில் உள்ள புரதச் சத்தின் அளவு காளானிற்குக் காளான் மிகவும் வேறுபடுகிறது. அதுபோலவே அமினோ அமிலங்களின் அளவும் காளான் வகைக்குத் தக்கவாறு வேறுபடுகின்றது. பொது வாகவே எல்லாக் காளானிலும் 80 சதம் தண்ணீர் காணப்படுகிறது. குறிப்பாக, எல்லாக் காளான்களிலும் வைட்டமின்கள் சி மற்றும் பி

வகைகள் அதிகமாக உள்ளன. ஃபோலிக் அமிலம், தயாமின் மற்றும் சியாசின் அதிகமாக உள்ளன. பொட்டாசியம் மற்றும் பாஸ்பரஸ் தாது உப்புக்கள் அதிகமாகவும், சோடியம் உப்பு குறைவாகவும் உள்ளது.

தாமிரம், துத்தநாகம் மற்றும் மக்னீசியம் தாதுக்கள் அதிகமாக உள்ளன. ஆனால் இரும்பு மற்றும் சுண்ணாம்புச் சத்துக்கள் குறைவாக உள்ளன.

காளானின் மருத்துவ குணங்கள் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கண்டறியப்பட்டுள்ளது. பொதுவாக, காளானில் உள்ள மருந்துப் பொருள்களின் விளைவாக உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகி வருகிறது என கண்டறியப்பட்டுள்ளது. புற்று நோய்க்குக் காளான் ஒரு மிகச் சிறந்த உணவு. கட்டிகள் வருவதைத் தடுக்கும் தன்மை காளானில் அதிக அளவு உள்ளது. உடம்பில் உள்ள சர்க்கரையை நீக்கி நீரிழவு நோயாளிகளுக்குக் காளான் ஒரு வரப்பிரசாதமாகி வருகிறது. கொழுப்பற்ற உணவான காளானைத் தொடர்ந்து பயன்படுத்துவதால் இதய சம்பந்தமான நோய்களும், இரத்தக் கொதிப்பும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரலாம் என கண்டறியப்பட்டுள்ளது. மேலும் காளானின் உள்ள மாவுப் பொருள்கள் எரிசக்தி குறைந்த உணவாக இருப்பதால் நீரிழிவு நோய்க்கு எதிர்ப்பாகவும் உடம்பு எடையைக் குறைக்கும் மருந்தாகவும் காளான்கள் உள்ளன. தொடர்ந்து காளானை உணவாகப் பயன்படுத்துவதால் வயிற்றில் தோன்றும் புண்கள் குறைய வாய்ப்புகள் உள்ளன.

**காளானின் மருத்துவ குணங்கள்**

அதிக புரத சத்தும் மிக முக்கியமான அமினோ அமிலங்களும் உள்ளன. எளிதில் ஜீரணமாகக் கூடியது. மிகக் குறைந்த கொழுப்புச் சத்து இருப்பதால் இதயத்திற்கு ஏற்றது. மிகவும் குறைந்த கலோரி கொண்ட மாவுச்சத்து இருப்பதால்தான் நீரிழிவு நோய்க்கு சிறந்த உணவு. அதிக நார்ச்சத்தும், குறைந்த உப்புச் சத்தும், அதிகமான சாம்பல் சத்தும் இருப்பதால் வயிற்றுப் புண்ணுக்கும், இரத்த அழுத்த நோய்க்கும் சிறந்தது. வைட்டமின் காம்ப்ளக்ஸ் மற்றும் அதிகமாக உள்ளது. மேலும் வைட்டமின் உள்ள ஒரே தாவர உணவு. தாமிரச் சத்து இருப்பதால் இதய நோய்க்கும், செலினியம் சத்து இருப்பதால் புற்று நோய்க்கும் எதிர்ப்புச் சக்தி ஊட்டக் கூடியது. புற்று நோய், எய்ட்ஸ், மஞ்சள் காமாலை மற்றும் சிறுநீரக நோய்களுக்கு தடுப்பு சக்தி கொடுக்க வல்லது.

தகவல் : *யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை பொறியாளர், உடுமலை.*

# விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தில் உயிர்மச்சான்று பெற அழைப்பு

ஈரோடு, அக்.12

ஈரோடு விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் மா.சத்தியராஜ் வெளியிட்ட செய்தி குறிப்பில், ஒன்றிய மாநில அரசுகள் இணைந்து உயிர்ம வேளாண்மையை ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன என குறிப்பிட்டுள்ளார். தற்போது நச்சுத்தன்மை இல்லாத விளை பொருட்களுக்கு அதிக ஏற்றுமதி வாய்ப்பு மற்றும் உள்நாட்டு சந்தையிலும் நல்ல விலை கிடைக்கும் வாய்ப்புகள் பெருகி வருகிறது. நச்சுத்தன்மை இல்லாத விளை பொருட்களை உற்பத்தி செய்யவும் மதிப்பு கூட்டவும், வணிகம் செய்யவும் விதை சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றிப்பு துறை ஆனது பெரும்ப ங்காற்றி வருகிறது.

உணவு தானியங்கள், சிறு தானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துகள், காய்கறிகள், மூலிகை பயிர் மற்றும் பழங்கள் சாகுபடியில் நச்சுத்தன்மை இல்லாத விளை பொருட்களை உற்பத்தி செய்வதில் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையானது மத்திய அரசின் தேசிய உயிர்ம வேளாண் செயல்திட்டத்தின் படி அபீடா (புஊணசிம்பு) நிறுவனத்தின் வழிகாட்டுதல் மற்றும் அங்கீகாரத்தின் மூலம் செயல்படுத்தி வருகிறது.

உயிர்ம விளை பொருட்களை உற்பத்தி செய்பவர்கள் உயிர்ம முறையில் உற்பத்தி செய்வதற்கான சான்று பெற விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு துறையின் கீழ் தனி நபர் அல்லது குழுவாக அல்லது நிறுவனமாக பதிவு செய்து உயிர்ம வேளாண்மை சான்றைப் பெற்று பயனடையலாம்.

உயிர்மச்சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பிக்க tracenet.apeda.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம் அல்லது நேரில் அலுவலகத்தை அணுகியும் விண்ணப்பிக்கலம். விவசாயி களின் ஆதார் அட்டை நகல், பான் கார்டு நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படம், பண்ணையின் வரைபடம், மண் பாசன நீர் பரிசோதனை விவரம், ஆண்டு பயிர் திட்டம் மற்றும் பயிர் அடங்கல் ஆகிய ஆவணங்களை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு வயல் ஆய்வு மேற்கொள்ளப் பட்டு வாய்ப்பு சான்றிதழ் வழங்கப்படும். சான்றிதழானது ஓராண்டு

வரை செல்லுபடியாகும். வருடம் ஒருமுறை கட்டணம் செலுத்தி புதுப்பிக்க வேண்டும். பதிவு செய்து மூன்று ஆண்டுகள் நிறைவு செய்த பின்பு பண்ணையானது உயிர்ம நிலையை அடையும்.

உயிர்ம வேளாண்மைச் சான்று பெற விரும்பும் விவசாயிகள் ஒருங்கிணைந்த விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு அலுவலக வளாகம், வாய்க்கால்மேடு, பெருந்துறை சாலை, பிச்சாண்டாம்பாளையம் (அஞ்சல்), புத்தூர் புதுப்பாளையம் கிராமம், ஈரோடு - 638 052 என்ற முகவரியில் உள்ள விதை சான்றளிப்பு மற்றும் உயிர்மச்சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.



# இந்திய வேளாண்மையில் ஐ.சி.ஏ.ஆர்.-யின் தாக்கமும் விளைவுகளும் - ஒரு பார்வை

இந்தியாவில் வேளாண் துறை வளர்ச்சி அடைந்து வருகிறது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அதனுடைய வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக இருப்பது இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் (I.C.A.R) என்பதை குறிப்பிடாமல் இருக்க முடியாது.

வேளாண் துறையின் வளர்ச்சி ஆக்கப்பூர்வமான ஆராய்ச்சி களின் அடிப்படையில் கடந்த கால் நூற்றாண்டுகளாக தான் வேகமெடுத்திருக்கிறது என்பதையும் சுட்டி க்காட்டத் தோன்றுகிறது.

**I.C.A.R-யின் ஆய்வு அறிக்கையின் தகவல்?**

கடந்த 2024-25 ஆண்டுகளாக வேளாண் ஆராய்ச்சிகளும் தொழில்நுட்பமும் வேளாண் உற்பத்தியில், 3யில் 1 பங்கு அதிகரித்துள்ளதாக ஆய்வு அறிக்கை கூறுகிறது. இதற்கு முக்கிய காரணமாக இருப்பது மேம்படுத்தப்பட்ட விதைகள், இயந்திரங்களின் பயன்பாடு, பருவ நிலைகளை எதிர் கொள்ளும் வகையிலான தொழில்நுட்பம் விரிவுபடுத்தப்பட்ட சேவைகள், இயற்கை விவசாயத்தின் மேலாண்மை உள்ளிட் டவை தான் என்பதை இந்த அறிக்கை பதிவு செய்கிறது.

தங்களது கணிப்பும், ஆய்வுகளும் துல்லியமானவை அல்ல, என்றாலும் ஓரளவு வளர்ச்சி குறித்த போக்கை ICAR தெளிவு படுத்தாமல் இல்லை.

**வேளாண்மையில் இடர்கள் என்ன?**

இந்திய வேளாண் துறை பல்வேறு பிரச்சனைகளையும் இடர்களும் எதிர் கொள்கிறது. மானியங்கள், இடுபொருள் காண உதவியும் இந்த சாவலை எதிர்கொள்ளுவதற்கு போது மான விடை இல்லை, அதுமட்டுமல்ல குறைந்து வரும் நில இருப்பு (LAND HOLDING) கவலையளிக்கிறது.

ஒவ்வொரு தலைமுறையும் மாறும் போது பாகப்பிரிவினை ஏற்படுவதால் அரை ஏக்கர், கால் ஏக்கர், ஒரு ஏக்கர் நிலத்தில் சரியான விவசாயம் செய்ய முடியாத சூழல் ஏற்படுகிறது. அதன் காரணமாக விளைநிலங்கள் வீட்டு மனைகளாகவும் (PLAT) தரிசாகவும் போடப்படுகின்றன.

**விவசாயத்தில் எதிர்பாராத விளவுகள்?**

தொடர்ந்து இரசாயன உரங்களின் பயன்பாட்டால் அள்ளி கொடுத்த நிலங்கள் இன்று மகசூலை கிள்ளி கொடுக்கிறது. விவசாய நிலமும் மலடாகி போய்விட்டது. மண்ணுக்கு உணவு வைக்காமல் செடிகளுக்கு தேவைக்கு அதிகமாக உரம் வைப்பதன் எதிர்வொலி காரணமாக விளைச்சல் குறைவு.

**I.C.A.R.யின் சாதனைகள்?**

கடந்த 24-25 ஆம் ஆண்டில் பயிர்களின் உற்பத்தி 19 மில்லியன் டன், தோட்ட பயிர்களின் உற்பத்தி 7 மில்லியன் டன், மீன் வளர்ப்பு உற்பத்தியில் 1.4 மில்லியன் டன் அதிகரித்து உள்ளன. இதன் மூலமாக சுமாராக 40,000 கோடி கூடுதலான வருமானத்தை வேளாண் துறை ஈட்டியுள்ளது என்றால் ஆச்சரியமாக இருக்கிறதல்லாவா?

386 மேம்படுத்தப்பட்ட பயிர் விதைகள், 2025யில் I.C.A.R. உருவாக்கி இருக்கிறது. அவற்றில் 94% பயிர் விதைகள் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையிலானவை. இதுபோன்ற உற்பத்தியை மேம்படுத்தும் கண்டுபிடிப்புகள், இந்தியாவின் வேளாண் துறையின் வளர்ச்சியை வடிவமைக்க தொடங்கி இருக்கின்றன.

வேளாண் ஆராய்ச்சிக்கு செலவிடும் ஒவ்வொரு ஒரு ரூபாயில், 13.85 என்கிற அளவில் பலனளிக்காது. வேறு எந்த துறையிலும் ஆராய்ச்சிகள் இந்த அளவிற்கு பயன் அளிப்பதில்லை. இருந்தாலும்கூட வேளாண் துறையின் விடாது ஆராய்ச்சிகளும் நவீன தொழில்நுட்பங்களும் இந்திய வேளாண்மையை புரட்டி போட்டுள்ளது என்பது மிகையல்ல.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# வேளாண் கல்லூரி மாணவிகளின் தீவிரக் கள ஆய்வு



திருவாரூர், அக்.12

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டாரத்தில் உள்ள அகறவேல்குடி, உள்ளிக்கோட்டை, ராமாபுரம் மற்றும் சவளக்காரன் கிராமங்களில் வேளாண் கல்லூரி மாணவிகள் தீவிரக் கள ஆய்வு செய்தனர்.

வேளாண் கல்லூரி இறுதி ஆண்டு மாணவிகள் தங்களது 'கிராம வேளாண் அனுபவத் திட்டத்தின்' (RAWE) 4-ஆம் நாள் களப்பணியாக, தங்களுக்கு ஒதுக்கப்பட்ட அகறவேல்குடி, உள்ளிக்கோட்டை, ராமாபுரம் மற்றும் சவளக்காரன் ஆகிய கிராமங்களுக்குச் சென்று தீவிரக் கள ஆய்வில் ஈடுபட்டனர்..

இன்று காலை அக்கிராமங்களின் கிராம நிர்வாக அலுவலர் களை (VAO) நேரில் சந்தித்த மாணவிகள், அக்கிராமங்களின் மக்கள் தொகை, எழுத்தறிவு பெற்றோர் மற்றும் பெறாதோர் விகிதம், சாகுபடிக்கு உகந்த நிலப்பரப்பு (Cultivable Land) மற்றும் சாகுபடி செய்யப்படாத தரிசு நிலங்களின் பரப்பளவு (Non-cultivable Land) குறித்த அதிகாரப்பூர்வப் புள்ளிவிவரங்களைச் சேகரித்தனர்.

அதனைத் தொடர்ந்து, அக்கிராமங்களில் உள்ள சிறு விவசாயிகள் (Small Farmers), குறு விவசாயிகள் (Marginal Farmers) மற்றும் பெண் விவசாயிகளின் (Women Farmers) விளைநிலங்களுக்கு நேரில் சென்று பார்வையிட்டனர். அங்கு அவர்களின் விவசாய முறைகள், பயிர் சாகுபடி அனுபவங்கள், எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் வாழ்வாதார நிலவரங்கள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்து குறிப்பெடுத்துக் கொண்டனர்.

கிராமப்புற வேளாண் சூழலை நேரடியாகக் கற்றுக்கொள்ளவும், விவசாயிகளின் தேவைகளை அறிந்து கொள்ளவும் இந்த 4-ஆம் நாள் களப்பணி மிகவும் பயனுள்ளதாக அமைந்தது என மாணவிகள் தெரிவித்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# வீட்டு காய்கறி தோட்டம் – ஒரு பார்வை



கோயம்புத்தூர், அக்.12

இன்றைய வேகமான வாழ்க்கை முறையில் மக்கள் அனைவரும் துரித உணவுகளை உட்கொள்வதில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இந்த உணவுகளில் நமக்குத் தேவையான வைட்டமின்கள் மற்றும் தாது உப்புகள் எதுவும் கிடைப்பதில்லை. மேலும் காய்கறிகளின் முக்கியத்துவத்தை அறியாமை, விலை உயர்வு மற்றும் நகர்ப்புற பகுதிகளில் காய்கறிகளை பயிரிட போதுமான இட வசதி இல்லாமை ஆகிய காரணங்களினால் ஒவ்வொருவரும் தினசரி உட்கொள்ளும் காய்கறிகளின் அளவு குறைந்து வருகிறது. மனிதன் உண்ணும் உணவில் காய்கறிகள் 50 சதவீதம் பங்களிக்கின்றன. மேலும் காய்கறிகள் 14 வகையான தாது உப்புக்கள் மற்றும் முதன்மை வைட்டமின்களான ஏ பி சி டி இ கே போன்றவற்றை அதிக அளவில் கொண்டுள்ளன.

**வீட்டு காய்கறி தோட்டத்தின் பயன்கள் :** வீட்டிற்கு தேவையான அனைத்து காய்கறிகளையும் வீட்டிலேயே உற்பத்தி செய்து கொள்ளலாம். காய்கறிகள் வாங்குவதற்காக ஆகும் செலவு, இதன் மூலம் குறைக்கப்படுகிறது. காய்கறி தோட்டம் அமைப்பதன் மூலம் வீட்டை குளுமையாக வைத்துக் கொள்ளலாம். அதனால் மின் உபயோகமும் குறையும் வீட்டு காய்கறி தோட்டம் அமைப்பதன் மூலம் வீட்டிற்கு அழகு சேர்க்கலாம், வீட்டில் உள்ள பெண்கள் பெரியவர்கள் மற்றும் குழந்தைகளுக்கு அருமையான பொழுது போக்காகவும் இந்த காய்கறி தோட்டங்கள் உள்ளன. மக்களிடையே காய்கறி தோட்டத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் பொருட்டு கோயம்புத்தூர், வேளாண்மை அறிவியல் நிலையம், இந்த வருடம் காய்கறி தோட்டம் பற்றிய செயல்விளக்கத்தை பயிற்சிகளின் மூலமும் முன்னிலை செயல்விளக்கத் திட்டத்தின் மூலமும் நடை முறைப்படுத்தி வருகிறது. அதனைத் தொடர்ந்து 9.10.26 அன்று அன்னூர் வட்டாரத்தில் உள்ள பிள்ளையப்பன் பாளையம் மற்றும் அல்ல பாளையம் கிராமங்களில் உள்ள 10 முன்னோடி விவசாயிகளுக்கு வீட்டு காய்கறி தோட்டம் அமைப்பதற்கான விதைகள் மற்றும் இடுபொருளான மண்புழு உரம் வேர் உட் பூசாணம் மற்றும் காய்கறி தோட்டத்திற்கான பயிற்சி கையேடு ஆகியவற்றை வழங்கி உள்ளது. இந்நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலையம் மனையியல் வல்லுநர் பா.கோமதி, வீட்டு காய்கறி தோட்டம் அமைப்பதற்கான நோக்கத்தையும் மற்றும் அதன் முக்கியத்துவத்தையும் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

# விவசாயிகளுக்கு மண் மாதிரி எடுத்தல், மண் பரிசோதனை மற்றும் கொய்யா மதிப்பு கூட்டுதல் பயிற்சி




சிவகங்கை, அக்.12

சிவகங்கை மாவட்டம், விசாலயன்கோட்டையில் அமைந்துள்ள சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் சார்பில், கிராமப்புற வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் பயிலும் மாணவர்கள் வி.ஹேமன், கோ.ஆதித்தியன், வீ.கோகுல் யஷ்வந்த், மு.லெனில் அசோக், ஆ. பால் லித்திக் ராஜ் மற்றும் சே.சேது மாதவன் ஆகியோர் விவசாயிகளுக்கு மண் மாதிரி எடுத்தல் மற்றும் கொய்யா மதிப்பு கூட்டுதல் குறித்து பயிற்சி அளித்தனர்.

மாணவர் மு.லெனில் அசோக், மண் மாதிரிகளை முறையாகச் சேகரித்து பரிசோதனை செய்வதன் அவசியம் குறித்து விளக்கினார். மண் பரிசோதனை மூலம் சமச்சீரான உரமிடுதல், மண் வளப் பராமரிப்பு, உரச் செலவைக் குறைத்தல் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகிய நன்மைகள் கிடைக்கும் என எடுத்துரைத்தார்.

மாணவர் வி.ஹேமன், கொய்யா பழத்திலிருந்து ஜெல்லி தயாரிக்கும் முறையை விளக்கினார். நன்கு முதிர்ந்த கொய்யாப் பழங்களைத் தேர்ந்தெடுத்து, சாறு எடுத்து, சர்க்கரை மற்றும் சிட்ரிக் அமிலம் சேர்த்து ஜெல்லி தயாரித்து, கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாட்டில்களில் நிரப்பிச் சேமிக்கும் முறையை எடுத்துரைத்தார். இதன் மூலம் கொய்யாவிற்கு மதிப்பு கூட்டி, விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்கலாம் என விளக்கப்பட்டது.

இப்பயிற்சி விவசாயிகளுக்கு மண் வள மேலாண்மை மற்றும் பழங்களில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் குறித்த விழிப்புணர்வையும் நடைமுறை அறிவையும் வழங்கியது.

# நாட்டு பசுவின் சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் கைவினைப் பொருட்களை பகுத்தாய்வு செய்த வேளாண் கல்லூரி மாணவிகள்



திருவாரூர், அக்.12

திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் ஒன்றியம், சாத்தனூர் கிராமத்தில் வசிக்கும் இலக்கியா மாட்டு சாணத்தின் மூலமாக மதிப்பு கூட்டு பொருட்களான பஞ்சகவ்ய விநாயகா, பஞ்சகவ்ய விளக்கு, பசுச்சாண திருநீறு, பசுச் சாண தூபவத்தி, பசுச்சாண விளக்கு மேடை முதலியவற்றை தயாரித்து வருகிறார். இதனை நாகப் பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் மாணவிகள் பார்வையிட்டு இதன் செயல்முறை விளக்கங்களை கேட்டறிந்தனர். இப்பொருட்கள் நன்கு காயவைத்த பசுஞ்சாணம் மற்றும் பசும்சாணம், பிசின் மாவு ஆகியவற்றை நன்கு கலந்து உருவாக் கப்படுகிறது. நான்கு மாடுகளில் இருந்து பெறப்படும் மாட்டு சாணத்தை பயன்படுத்தி சிறிய அளவிலான மதிப்பு கூட்டு பொருட் களை உருவாக்கி விநியோகம் செய்து வருகிறார். மதிப்பு கூட்டுப் பொருட்களை தானே தயாரிப்பதோடு தேவை ஏற்படின் இரு வேலையாட்களை பயன் படுத்தி பொருட்களை தயாரிக்கிறார். மேலும் சாம்பலை பயன்படுத்தி பல் பொடியும் தயாரித்து வருகிறார். சாணத்தை பயன்படுத்தி இயற்கையான முறையில் தயாரிக்கப்படும் மதிப்பு கூட்டு பொருட்கள் எளிதாக மக்கும் தன்மையும் கொண்டிருப் பதால் சுற்றுச்சூழல் மாசுபாட்டை குறைப்பதுடன் உடையும் தன்மை இல்லாததாகவும் உள்ளது. பஞ்சகவ்ய விநாயகர், பஞ்சகவ்ய விளக்கு, பசுஞ்சாணம் சாம்பிராணி, பசுஞ்சாண திருநீர் ஆகியவை சேர்த்து ரூபாய் 100 என்று விநியோகம் செய்து வருகிறார்.

**கோகுலம் கோழி பண்ணை :** சாத்தனூரில் வசித்து வரும் இலக்கியா ரூ.6 லட்சத்திற்கு, 20 அடி அகலம் 80 அடி நீளம் உள்ள கோழிப்பண்ணை அமைத்துள்ளார். இப்பண்ணையில் இரண்டு அணி நாட்டுக் கோழிகள் உள்ளன. ஒரு அணி கன்னி கோழி யாகவும் மற்றொரு அணி முட்டையிடும் கோழி ஆகவும் உள்ளது. இங்கு முட்டை கோழிகள் மட்டுமே வளர்க்கப்படுகின்றன. ஒரு கோழி 220 முட்டைகளை இடுகின்றது. 2 வருடத்திற்கு பிறகு இக்கோழிகள் விற்கப்பட்டு புதிய அணிகள் பண்ணையில் சேர்க்கப்படுகின்றன.

இப்பண்ணையில் மொத்தம் இதுவரை மூன்று அணிகள் வளர்க்கப்பட்டுள்ளது. தற்பொழுது இரு அணிகள் மட்டுமே உள்ளது. ஒரு தொழிலாளியால் முட்டைகள் சேகரிக்கப்படுகிறது. இங்கு மொத்தம் 600 சொனாலி வகை நாட்டுக்கோழிகள் உள்ளன. கோழி களை ஊட்டச்சத்து மிக்கதாக வளர்ப்பதற்கு துணை ஊட்டச்சத்தாக GROVIPLEX மற்றும் நோய்களை தவிர்ப்பதற்கு (BT) BECTOFLOX ஆகியவை வழங்கப்படுகிறது. 2 Kg சேவல் மற்றும் 1.5 Kg கோழி ரூ. 400க்கு விற்கப்படுகிறது. மேலும் அக்னீஸ்வரன் பராமரிக்கும் மீன் குட்டைகளை மாணவிகள் பார்வையிட்டு மீன் வளர்க்கும் முறை, பராமரிப்பு செலவு பற்றியும் விளக்கமாக கேட்டறிந்தனர். மேலும் மீன் வளர்ப்பில் உள்ள பிரச்சனைகள் குறித்தும் ஆராய்ந்தனர்.



# தென்னையில் ஒருங்கிணைந்த ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ மேலாண்மை: விவசாயிகளுக்கு செயல்விளக்கம்




புதுக்கோட்டை, அக்.12

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தென்னையில் ஒருங்கிணைந்த ரூகோஸ் சுருள் வெள்ளை ஈ மேலாண்மை குறித்த செயல்விளக்க நிகழ்ச்சி மற்றும் இடுபொருள் விநியோகம் 12.10.26 அன்று நடைபெற்றது.

நிகழ்ச்சியில் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் மு.தமிழ்ச்செல்வன் (தோட்டக்கலை) தென்னை சாகுபடியின் முக்கியத்துவத்தையும் அதில் உயிருள்ள காரணிகளால் ஏற்படும் பாதிப்புகளையும் குறித்து விவசாயி களுக்கு விளக்கினார். முனைவர் இரா.ராம்ஜெகதீஷ் (பயிர் நோயியல்) தென்னை மரத்தில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈயியை எவ்வாறு ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்துவது என்றும், வெள்ளை ஈயை அழிக்கக்கூடிய என்கார்சியா ஒட்டுண்ணியை எவ்வாறு தென்னந்தோப்புகளில் கண்டறிந்து அவற்றை பாதுகாத்து அதன் மூலம் வெள்ளை ஈயை அழிப்பது பற்றியும் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளித்தார்.

இதனைத் தொடர்ந்து, தென்னையில் வெள்ளை ஈயை கட்டுப்படுத்துவதற்கான மஞ்சள் ஒட்டுப் பொறி மற்றும் அசாடிரக்டின் (வேப்ப எண்ணெய் கரைசல்) விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. மேலும் இந்த நிழ்ச்சியின் ஏற்பாடுகளை பி.கருப்பசாமி, திட்ட உதவியாளர் (தொழில் நுட்பம்), தே.அமுல் ராஜ், திட்ட உதவியாளர் (கணினி) மற்றும் அ.தினகரன் (கால நிலை கவணிப்பாளர்) சிறப்பாக செய்திருந்தனர்.

# கோட்டூரில் விவசாயிகளை நேரில் சந்தித்து கள ஆய்வு மேற்கொண்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



நாகப்பட்டினம், அக்.12

நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூரில் இயங்கி வரும் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் 4 – ஆம் ஆண்டு இளநிலை வேளாண் மாணவிகள், கிராமப்புற வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள கோட்டூர் கிராமத்தில் கள ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த கள ஆய்வின் போது மாணவிகள், கிராமத்தில் உள்ள சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், பெரு விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் ஆகியோரை நேரில் சந்தித்து விவரங்களை சேகரித்தனர்.

மேலும், விவசாயிகள் சாகுபடி செய்யும் பயிர்கள், பயிர் சாகுபடி முறைகள், நிலத்தின் தன்மை, பாசன வசதிகள், வேளாண் இடுபொருட்களின் பயன்பாடு, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை முறைகள் மற்றும் விளை பொருட்களை சந்தைப்படுத்தும் முறைகள் குறித்து கேட்டறிந்தனர்.

மேலும் சாகுபடி செலவு, உற்பத்தி செலவு, நீர்ப்பாசன பிரச்சினைகள், விவசாயிகள் எதிர்கொள்ளும் பூச்சி மற்றும் நோய் தாக்குதல்கள் குறித்தும், அவர்களின் அனுபவங்கள் குறித்தும் மாணவிகள் தகவல்களை பெற்றனர்.

வகுப்பறையில் கற்ற வேளாண் அறிவை, விவசாயிகளின் கள நிலை அனுபவத்துடன் தொடர்புபடுத்தி புரிந்துகொள்ள இந்த கள ஆய்வு பயனுள்ளதாக அமைந்தது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# இப்கோ நானோ விழிப்புணர்வு முகாம்

கோயம்புத்தூர், அக்.12

கோயம்புத்தூர் மாவட்டம், காருண்யா பல்கலைக்கழகத்தில், நானோ விழிப்புணர்வு கண்காட்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு நறுமணப் பொருட்கள் வாரியத்தின் தலைவர் சகுந்தலா மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மை இணை இயக்குநர் தமிழ்ச்செல்வி ஆகியோர் தலைமை தாங்கினர். இக்கண்காட்சியில், இப்கோ கள அலுவலர் சரவணன், இப்கோவின் பல்வேறு தயாரிப்புகள் மற்றும் நானோ உரங்களின் நன்மைகள் மற்றும் பயன்படுத்தும் முறைகள்ருமற்றும் பல்வேறு வேளாண் சார்ந்த தகவல்களை வழங்கினர்.

மேலும், சமச்சீர் உரப்பயன்பாடு, மண்வளப் பாதுகாப்பு மற்றும் பயிர் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதன் அவசியம் குறித்து விவசாயிகள் மற்றும் வேளாண் கல்லூரி மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. குறிப்பாக, நெல் சாகுபடியில் இப்கோ நானோ யூரியா பிளஸ் மற்றும் இப்கோ நானோ டி.ஏ.பி. ஆகியவற்றின் பயன்பாடு, அவற்றின் பயன்கள், சரியான பயன்பாட்டு முறைகள் மற்றும் அறிவியல் அடிப்படையிலான உர மேலாண்மை குறித்து விரிவாக விளக்கப்பட்டது.






விவசாயிகள் மற்றும் மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று, நானோ உரங்கள், உர மேலாண்மை, பயிர் சாகுபடி முறைகள் குறித்து அறிந்து கொண்டனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்**
  நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தமிழ்நாட்டின் பள்ளிக் கல்வி இயக்கம், தொழிற்கல்விப் பள்ளி மாணவர்களுக்கான காளான் வளர்ப்பு-(சிறிய பண்ணை) திறன் பயிற்சி



கடலூர், அக்.12

கடலூர் மாவட்டம், வேளாண்மை அறிவியல் நிலையம் விருத்தா சலத்தில், பள்ளி மாணவர்களுக்கான, நான் முதல்வன் திட்டத்தின் கீழ் தொழில் கல்வி காளான் வளர்ப்பு (சிறிய பண்ணை) திறன் பயிற்சி 12.10.26 முதல் 31.10.26 (17 நாட்கள்) வரை நடைப்பெற்று கொண்டிருக்கிறது.

இப்பயிற்சியை, வேளாண்மை அறிவியல் நிலைய மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் க.நடராஜன், துவக்கி வைத்து, வாழ்த்துரை வழங்கினார். விருத்தாசலம், ஆண்கள் மேல்நிலைப்பள்ளி விவசாய தொழில் கல்வி ஆசிரியை அருள்மொழி, இருப்புகுறிச்சி, மேல்நிலைப்பள்ளி ஆசிரியர், இரங்கநாதன் மற்றும் மங்களம்பேட்டை தொழில்கல்வி ஆசிரியர், பாபாஜி கண்ணன் ஆகியோர் நன்றாக பயின்று காளான் வளர்ப்பில் நன்கு தேற பள்ளி மாணவர்களுக்கு ஊக்கமளித்தனர்.

மேலும் இப்பயிற்சியில் முனைவர் சிவசங்கர், காளான் வளர்ப்பு பற்றிய அறிமுகம் மற்றும் காளான் வளர்க்கும் முறைகள் பற்றிமாணவர்களுக்கு விளக்கினார். இனி வரும் பயிற்சி காலங்களில் தனித்து காளான் வளர்ப்பில் ஈடுபட பயிற்சி அளிக்கப்படும். இதனால் மாணவர்கள் தொழில் முனைவோர் களாக மாற வாய்ப்பு உள்ளது. இதனால் இவர்களது பொருளாதார மேம்பட்டு உயர் கல்வியில் சேரும் வாய்ப்பு அதிகம் உள்ளது. மேலும் இப்பயிற்சியல் விருத்தாசலம், ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள், இருப்புகுறிச்சி, மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மற்றும் மங்களம்பேட்டை தொழில்கல்வி மாணவர்கள் கலந்துக் கொண்டனர்.

# வம்பனில் பள்ளி மாணவர்களுக்கு மதிப்புக்கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள் தயாரிப்புப் பயிற்சி தொடக்கம்



புதுக்கோட்டை, அக்.12

புதுக்கோட்டை மாவட்டம், வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில், தொழிற்கல்வி பயிலும் பள்ளி மாணவர்களுக்கான பழங்கள் மற்றும் காய்கறிகளிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்தல் பயிற்சியின் தொடக்க விழா திங்கள்கிழமை (12.10.26) நடைபெற்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விரிவாக்கக் கல்வி இயக்ககம், இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமம் புது தில்லியின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கி வரும் வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்ககம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இப்பயிற்சி நவம்பர் 5 வரை நடைபெறுகிறது.

விழாவிற்கு வேளாண்மை அறிவியல் நிலைய முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர் முனைவர் ம.தமிழ்ச்செல்வன் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், வேளாண் விளை பொருட்களை மதிப்புக்கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றுவதன் மூலம் அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்து, கிராமப்புறங்களில் சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்றார். புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் கூ.சண்முகம் சிறப்புரையாற்றுகையில், தொழிற்கல்வி மாணவர்களின் திறன் மேம்பாட்டிற்கும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் உதவுகிறது எனக் குறிப்பிட்டார். வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையப் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் சுப.மாரிமுத்து, பழங்கள் மற்றும் காய்கறிகளை அறிவியல் முறையில் பதப்படுத்துவதன் மூலம் அவற்றின் சேமிப்புக் காலத்தையும் பொருளாதார மதிப்பையும் உயர்த்த முடியும் என்றார்.

மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர், சாலை செந்தில், மாணவர்கள் பயிற்சி வாய்ப்புகளைப் பயன்படுத்தித் தன்னம்பிக்கையையும் தொழில்நுட்பத் திறன்களையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். திருவரங்குளம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் ச.சிவலிங்கம், தொழிற்கல்வி சுயதொழில் தொடங்குவதற்கான திறன்களை வளர்க்க உதவுகிறது எனத் தெரிவித்தார்.

இந்த தொழில்நுட்ப பயிற்சியின் மூலம் உணவுப் பதப்படுத்துதல், விளைபொருட்களின் மதிப்பை உயர்த்துதல், உணவு வீணாவதைக் குறைத்தல் மற்றும் தொழில் முனைவோர்க்கான வாய்ப்புகள் குறித்து மாணவர்களுக்கு செய்முறை அறிவு வழங்கப்படுகிறது.

வேளாண்மை அறிவியல் நிலையத் தொழில்நுட்ப வல்லுநர் க.பி. செந்தில்குமார் (உழவியல்) வரவேற்புரையாற்றினார். தொழில்நுட்ப வல்லுநர் முனைவர் செ.ஜேசுப்பிரியா பூர்ணகலா நன்றியுரை யாற்றினார். இந்நிகழ்ச்சியில் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் 76 மாணவர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளைத் திட்ட உதவியாளர்கள் பி.கருப்பசாமி, தே.அமுல்ராஜ் மற்றும் கால நிலைக் கவணிப்பாளர் அ.தினகரன் ஆகியோர் செய்திருந்தனர்.

